

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2025) முகாம் அலுவலகத்தில், நடிகர் பொன்வண்ணன் – நடிகை திருமதி சரண்யா தம்பதியினர் சந்தித்து தங்களது மகள் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின் உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (25.12.2025) நாடகப்பிரியா நாடகக் குழுவின் தலைவரும் நடிகருமான எஸ்.வி. சேகர் அவர்களின் 75வது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து தெரிவித்தார். உடன் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி முருகன் மற்றும் எஸ்.வி. சேகர் அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2025) முகாம் அலுவலகத்தில், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொருளாளர் எல்.கே. சுதீஷ் சந்தித்து, 28.12.2025 அன்று நடைபெறவுள்ள தேமுதிக நிறுவனத் தலைவர் விஜயகாந்த் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைப்பு விடுத்தார். உடன் தேமுதிக தலைமை நிலையச் செயலாளர் ப. பார்த்தசாரதி உள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2025), சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# சிறுபான்மையினர் அச்சமின்றி வாழத் துணையிருப்பதில் தான் பெரும்பான்மையினரின் பலமும் - குணமும் இருக்கிறது!

## ஜபல்பூர் – ராய்பூர் பிற இடங்களில் சிறுபான்மையினர் தாக்குதலுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, டிச.26–**

**மணிப்பூர் கலவரங்களைத் தொடர்ந்து, இப்போது ஜபல்பூர் – ராய்பூர் மற்றும் பிற இடங்களிலும் சிறுபான்மையினர் மீது தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:–**

சிறுபான்மையினர் அச்சமின்றி வாழத் துணையிருப்பதில்தான் பெரும்பான்மையினரின் பலமும் இருக்கிறது; குணமும் இருக்கிறது!

பெரும்பான்மை என்ற பெயரில் சில வலதுசாரி வன்முறைக் கும்பல்கள் தாக்குதல்களிலும் கலவரங்களிலும் ஈடுபடுவது, அதுவும் பிரதமர் அவர்கள் கிறிஸ்துமஸ் விழாவில் பங்கெடுக்கும்போதே ஈடுபடுவது, நாட்டு மக்களுக்குத் தவறான செய்தியையே கொண்டு சேர்க்கும்.

மணிப்பூர் கலவரங்களைத் தொடர்ந்து, இப்போது ஜபல்பூர் - ராய்பூர் மற்றும் பிற இடங்களிலும் சிறுபான்மையினர் மீது தாக்குதல் என்பதை நல்லிணக்கத்தை விரும்பும் நாட்டு மக்கள் எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒன்றிய பா.ஜ.க. அரசு பொறுப்பேற்ற பிறகு, சிறுபான்மையினருக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகள் 74% அதிகரித்திருப்பதாகச் சொல்லப்படும் புள்ளிவிவரங்கள், எதிர்காலம் எதிர்நோக்கியுள்ள ஆபத்துகளை உணர்த்துகிறது.

எனவே, நாட்டு மக்களைப் பிளவுபடுத்திக் குளிர்காய நினைக்கும் கலவரக் கும்பல்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கிட வேண்டியது நம் அனைவரது பொறுப்பும் கடமையுமாகும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## டிச.27,28–ஜன 3,4 ஆகிய தேதிகளில் வாக்காளர் சிறப்பு முகாம்

# விடுபட்ட வாக்காளர் சேர்க்கும் பணியில் தீவிர களப் பணியாற்றுவீர்!

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

*காஞ்சிபுரம், டிச.26*

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் கடந்த நவம்பர் மாதம் 4 ஆம் தேதி எஸ்.ஐ.ஆர். பணி தொடங்கப்பட்டு டிசம்பர் மாதம் 11 ஆம் தேதி அன்று நிறைவடைந்தது. இதில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக களப் பணியாற்றி வாக்காளர்களின் படிவங்களை பதிவு செய்ய பெரிதும் உதவி புரிந்து மிகச் சிறப்பாக செயலாற்றினர்.



இந்நிலையில் தான் தேர்தல் ஆணையத்தால் கடந்த 19 ஆம் தேதி அன்று விரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்டது. அதில் தமிழ்நாடு முழுவதும் சுமார் 97 லட்டம் வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன என்பதினை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். முகவரி மாற்றம் , இறந்தவர்களின் பெயர்கள் நீக்கம் என்று தேர்தல் அதிகாரி அறிவித்து இருந்தாலும் தகுதியுள்ள வாக்காளர்கள் நீக்கப்பட்டதாகவே நம்மால் அறிய முடிகிறது.

எனவே நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் அடங்கிய சட்டமன்றத் தொகுதியான காஞ்சிபுரம், உத்திரமேரூர், மதுராந்தகம் மற்றும் செய்யூர் ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் விடுபட்ட வாக்காளர்களை கண்டுபிடித்து அவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்த்திட நாம் முனைப்புடன் பணியாற்றிட வேண்டும்.

குறிப்பாக வருகிற டிசம்பர் மாதம் 27, 28 மற்றும் ஜனவரி 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் புதிய வாக்காளர் சேர்ப்புக்கான சிறப்பு முகாம்காள் நடைபெறும் என்று தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப் பட்டுள்ளது.

எனவே காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளிலுள்ள வரைவு வாக்காளர் பட்டியலை பிரித்து மாநகர, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள் மூலம் வழங்கப்பட்டு அந்த வரைவு வாக்காளர் பட்டியல் பி.எல்.ஏ.2 அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்தந்த பூத் பி.எல்.ஏ.2, பி.டி.எ. பி.எல்.சி. மற்றும் கழகத்தினர் அனைவரும் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலை சரி பார்த்திடும் வகையில் ஈடுபட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பூத் வாரியாக வாக்காளர் பட்டியலை கழகத்தினர் அனைவரும் சரி பார்த்து எஸ்.ஐ.ஆர். படிவம் தந்தும் வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட வாக்காளர்களையும் வாக்காளர் பட்டியல் பெயர் இருந்தும் எஸ்.ஐ.ஆர். படிவும் கிடைக்கப் பெறாத வாக்காளர்கள் மற்றும்18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களையும் கண்டறிந்து ஒவ்வொரு பாகத்திலும் அவர்களுடைய வாக்காளர் பெயர்களும் விடுபடாமல் அனைவரும் படிவம் 6-ஐ பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட பூத் அலுவலர்களிடம் வழங்கிட வேண்டும்.

அதன் படி வருகிற டிச 27, 28, ஜனவரி 3 மற்றும் 4 தேதிகளில் தேர்தல் ஆணையத்தால் நடைபெறும் வாக்காளர் சேர்த்தல் சிறப்பு முகாமை காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரும் பயன்படுத்தி தீவிரமாக களப் பணி மேற்கொண்டு நமது மாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரம், உத்திரமேரூர், மதுராந்தகம், செய்யூர் ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒரு வாக்காளரின் பெயரும் விடுபட வில்லை என்ற நிலையை உருவாக்கிட கழகத்தினர் அனைவரும் தீவிர களப் பணியில் ஈடுபட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழக இளைஞரணி செயலாளரும் தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ.நகரில் மாபெரும் பொதுகூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., பள்ளி மாணவிக்கு ஊக்கத்தொகை மற்றும் 1000 மகளிர்களுக்கு (பிரசர் குக்கர்) நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் முக்குலத்தோர் புலிப்படை தலைவர் சே.கருணாஸ் மற்றும் தலைமை கழக பேச்சாளர் சைதை.சாதிக் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியை சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கருணாகரன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

## "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" – இன்று

# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

*சென்னை, டிச.26-*

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி இன்று (26.12.2025) வெள்ளிக்கிழமை சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.

**கொளத்தூர் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: பாகம் 146 , இடம்: எண்.16, சுப்பிதமணியர் தோட்டம் முதல் தெரு, பெரம்பூர் சென்னை-11.

மாலை: 4.30 மணி:, பாகம் 147 , இடம்: மதுரை சாமி மடம் தெரு, ஆதி அந்திரா எதிரில்

மாலை: 5.00 மணி:, பாகம் 150 , இடம்: 26, தீட்டித்தோட்டம் 6வது தெரு, பெரம்பூர் சென்னை-11.

மாலை: 5.30 மணி: பாகம் 151 , இடம்: லட்சுமி நகர், 3வது தெரு, பெரம்பூர், சென்னை-11.

**கொளத்தூர் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 64, பாகம் 8 , இடம்: காமராஜர் தெரு, மக்காராம் தோட்டம், கொளத்தூர்-99.

மாலை: 4.30 மணி: வட்டம் 69 , பாகம் 217 , இடம்: ஜி.கே.எம்.காலனி, 18வது தெரு, சென்னை-82.

மாலை: 5.00 மணி: வட்டம் 69அ , பாகம் 226 , இடம்: மார்கட் தெரு, சென்னை-82.

மாலை: 5.30 மணி: வட்டம் 69அ , பாகம் 227 , இடம்: வாஞ்சிநாதன் தெரு, சென்னை-11.

**துறைமுகம் கிழக்கு பகுதி**

மாலை: 6.00 மணி: வட்டம் 55அ, பாகம்: 39, 40, 54, 60. இடம்: எண்.75, ஜெயின் பவன் , சுப்பிரமணியம் தெரு, ஏழுகிணறு, சென்னை-1.

**துறைமுகம் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 54ஆ, பாகம்: 23, 24, 25 இடம்: வடமலை தெரு, கொண்டிதோப்பு, சென்னை.

**எழும்பூர் வடக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 99, பாகம்: 7, 8, 9.

**எழும்பூர் தெற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 61அ, பாகம்: 162, 163, 164, 165. இடம்: பூபதி நகர் தெரு, எக்மோர்

**திரு.வி.க.நகர் தெற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 73அ, பாகம்: 177, 178, 179

மாலை: 4.30 மணி: வட்டம் 75அ, பாகம்: 55, 56, 57



**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 98ஆ , பாகம்:204, 207, 208. இடம்: சோமசுந்தரம் 3, 4, 5 வது தெரு, மேட்டு தெரு, தேவராஜ் தெரு, N.K.K.தெரு.

**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 94, பாகம்: 17, 42, 67. இடம்: வடக்கு ஹைகோர்ட் காலனி, அம்மன் குட்டை, எம்.டி.எச். ரோடு

மாலை: 4.30 மணி: வட்டம் 94ஆ பாகம்: வடக்கு ஜெகநாத நகர், 4வது தெரு, 1வது மெயின் ரோடு வள்ளியம்மன் நகர் 1வது தெரு.

**அம்பத்தூர் வடக்கு பகுதி.**

மாலை: 4.00 மணி: வட்டம் 79அ , பாகம்:116 இடம்: பவானி அம்மன் கோயில் தெரு, ஏரிக்கரை சாலை

மாலை: 4.30 மணி: வட்டம் 79 , பாகம்: 106, இடம்: கம்பர் தெரு, லட்சுமி அம்மன் நகர்

மாலை: 5.00 மணி: வட்டம் 80 , பாகம்: 13, இடம்: பானுநகர் தனலட்சுமி தெரு

மாலை: 5.30 மணி: வட்டம் 81 , பாகம்: 127, இடம்: முருகப்பா ரெட்டி தெரு

மாலை: 6.00 மணி: வட்டம் 81 , பாகம்: 129இடம்: கண்ணையா செட்டி தெரு

மாலை: 6.30 மணி: வட்டம் 85 , பாகம்:219 இடம்: அம்பேத்கார் தெரு, காமாராஜபுரம்

மாலை: 7.00 மணி: வட்டம் 85 , பாகம்: 223 இடம்: பெரியார் தெரு, காமாராஜபுரம்

மாலை: 7.30 மணி: வட்டம் 86 , பாகம்: 235இடம்: குளக்கரைதெரு.

**அம்பத்தூர் தெற்கு பகுதி.**

மாலை: 5.00 மணி: வட்டம் 93 , பாகம்:320. இடம்: பாடிகுப்பம், நேரு தெரு.

மாலை: 5.00 மணி: வட்டம் 88 , பாகம்:289 இடம்: கம்பர் தெரு, குமரன் நகர்

மாலை: 5.00 மணி: வட்டம் 88 , பாகம்:290 இடம்:செல்வவிநாயகர் கோயில் தெரு, குமரன் நகர்.

மாலை: 5.00 மணி: வட்டம் 93 , பாகம்:324 இடம்: பாடிகுப்பம்

மாலை: 5.00 மணி: வட்டம் 89 , பாகம்:250 இடம்:கோல்டன் காலனி

மாலை: 5.00 மணி: வட்டம் 90 , பாகம்:328 இடம்: பாடி புதுநகர் 1வது தெரு, 4வது தெரு

மாலை: 5.00 மணி: வட்டம் 90 , பாகம்:329 இடம்: பாடி புது நகர் 1வது தெரு, 4வது தெரு

மாலை: 5.00 மணி: வட்டம் 89 , பாகம்:245 இடம்: கோல்டன் காலனி

மாலை: 5.00 மணி: வட்டம் 87 , பாகம்:181 இடம்: ஸ்டர்லிங் அப்பார்மெண்ட் 11வது தெரு

மாலை: 5.00 மணி: வட்டம் 87 , பாகம்:267 இடம்: ராஜா தெரு, பாடி

**அம்பத்தூர் கிழக்கு பகுதி.**

மாலை: 5.30 மணி: வட்டம் 175 , பாகம்: 175 இடம்: 65வது தெரு, கொரட்டூர், சென்னை-80

மாலை: 6.00 மணி: வட்டம் 179 , பாகம்: 179 இடம்: பெரியார் நகர், கொரட்டூர், சென்னை-80

மாலை: 6.30 மணி: வட்டம் 69 , பாகம்: 65 இடம்: பிரிதிவாக்கம், 5வது தெரு, பாரிநகர், அம்பத்தூர், சென்னை-53.

மாலை: 7.00 மணி: வட்டம் 70 , பாகம்:70 இடம்: விட்டல் தெரு, ஞானமூர்த்தி நகர், அம்பத்தூர், சென்னை-53.

மாலை: 7.30 மணி: வட்டம் 33 , பாகம்: 33இடம்: பெருமாள் கோயில் தெரு, கள்ளிகுப்பம், அம்பத்தூர், சென்னை-53.

மாலை: 8.00 மணி: வட்டம் 34 , பாகம்: இடம்: 34 பாடசாலை தெரு, கள்ளிகுப்பம், அம்பத்துஹர், சென்னை-53.

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு அறிவித்தள்ளார்.



காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், அரும்புலியூர் ஊராட்சி, கரும்பாக்கத்தில் 99 பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன், மற்றும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் ஆகியோர் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கினார்கள். உடன் ஒன்றியச் செயலாளர் டி.குமார், ஊராட்சி மன்றத் தலைவர் வெங்கட்ராமன், காஞ்சிபுரம் சார் ஆட்சியர் ஆஷிக் அலி உள்ளார்.